நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் **08.03.2019** ம் தேதி முற்பகல் **11.00** மணிக்கு நடைபெற உள்ளது.

மன்றப் பொருள்

1) மேட்டூர் நகராட்சி பொது சுகாதரப் பிரிவு I, III , IV மற்றும் மலேரியா பிரிவு நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 82 துப்புரவு பணியாளர்களுக்கு ( ஆண்கள் 42 நபர்கள், பெண்கள் 40 நபர்கள்) 2018–2019 ஆம் ஆண்டிற்கு சீருடைகள் வாங்கி வழங்க தேவைப்படும் உத்தேச செலவினம் ரூ.1.30 இலட்சத்திற்கும், சீருடை துணி வகைகளை The Tamil Nadu Textile Corporation Ltd, அவர்களிடம் வாங்கி வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் வழங்கலாம்.
2. மேற்காண் செலவினத்தை நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4311/2018/எச்1)**

**தீர்மானஎண். 58 நாள் 08.03.2019**

அனுமதிக்கப்பட்டது

**2)** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்களிலும் உள்ள வீடுகளில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளை விடுதலின்றி கணக்கெடுப்பு பணி முடிக்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் குருஞ்செய்தியின் தெரிவிக்கப்பட்டதின் படி வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளின் விவரம் அடங்கிய 11000 எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் Tamilnadu Multipurpose Indico Service திரும்ப அச்சடித்தமைக்கு உத்தேச செலவினத்தொகை ரூ.52000/- ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண். 431 /2019/இ1)**

**தீர்மானஎண். 59 நாள் 08.03.2019**

அனுமதிக்கப்பட்டது

3) தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110ன் கீழ் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.02.2019 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில் வறுமைகோட்டிற்கு கீழ் வாழும் கிராமபுற மற்றும் நகர்புற ஏழைகளுக்கு குறிப்பாக விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு சிறப்பு நிதி உதவி ரூ.2000/– வழங்க அரசு ஆணை (நிலை) எண்.19 மற்றும் 20 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அதி.ந) துறை நாள்.13.02.2019ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஆணையில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புள்ளி விவரங்கள் சேகரிக்க தினசரி தற்காலிக பணியாளர் (DBC)/ தூய்மை பாரத இயக்க திட்ட ஊக்குனர்கள்/ சமுதாய வள பயிற்றுனர்கள் போன்றவர்களால் கூடுதல் புள்ளி விவரங்கள் சேகரிக்க ஈடுபடுத்தப்பட வேண்டும் எனவும் கூடுதல் விவரங்கள் சேகரித்து சரிபார்த்த பின் கணினி இயக்குபவர்ககளை கொண்டு (Data Entry Operators) tnpoverty உடனுக்குடன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகள் பட்டியலின் விண்ணபங்களை பதிவிறக்கம் செய்து மேற்கண்ட பணியாளர்களை கொண்டு நகர்புறப் பகுதிகளில் குடும்ப வாரியான புள்ளி விவரங்கள் சேகரித்தல் மற்றும் படிவங்களை பூர்த்தி செய்து விண்ணபங்கள் அனைத்தும் சரிபார்க்க மேற்பார்வையாளர்கள் நியமித்து சரிபார்க்கப்பட்ட விண்ணபங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய இந்நகராட்சியில் போதுமான புள்ளி விவரக் குறிப்பாளர்கள் இல்லாததால் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் tnpoverty இணையதளத்தில் பதிவு செய்தும் மற்றும் Off line entry–ல் பதிவு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது காணொலி காட்சியின் மூலம் BPL Survey நல சம்மந்தப்பட்ட சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக V.C கூட்ட அரங்கில் நடைப்பெற்ற ஆய்வு கூட்ட அறிவுரை நாள்.27.02.2019ல் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும் விடுதலில்லாமலிலும் ஒரு வீடு கூட விடுதலின்றி கணக்கெடுப்பு பணி முடிக்கப்பட வேண்டும் எனவும் பெறப்பட்ட விண்ணபத்தினை உடனடியாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

BPL Survey பணிகளை முன்னுரிமை மற்றும் போர்க்கால அடிப்படையில் இப்பணிக்கு முக்கியத்துவம் கொடுத்து 02.03.2019 அன்று மாலை 6.00 மணிக்கு செய்து முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதின் படி அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும் விடுதலில்லாமலிலும் ஒரு வீடு கூட விடுதலின்றி கணக்கெடுப்பு பணி ( BPL Survey ) மேற்க்கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ.50,000/–க்கும் Survey செய்த விண்ணபங்களை உடனுக்குடன் அனைத்து வீடுகளையும் கணினியில் பதிவேற்றம் செய்ய (Data Entry Operator) பின்வருமாறு மகளிர் சுய உதவிக் குழுக்கள், முகில் மகளிர் சுய உதவிக்குழு, கொடிமலர் SHG, பனித்துளி மகளிர் சுய உதவிக்குழு மூலம் மேற்க்கொள்ளவும், இதற்க்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 1,20,000/– ஆகும். மேற்கண்ட செலவினங்களை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம்

அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.431/2019/இ1**

<u>**தீர்மானஎண். 60 நாள் 08.03.2019**</u>

<u>**அனுமதிக்கப்பட்டது**</u>

4) 2019-k; tUl j;jpa jkpoehL rl;lk;12-d; fPo;VwgLj;jggLk;cg tpjpfs;

jkpoehL khtl;l efuhl;rpfs; rl;lk; 1920d; gpupT 306 2!"# d; g$"k% 2019k; tUl j;jpa jkpoehL rl;lk;12d; fPo;gadgLj;jggl;l kw;&k; 'hf;fp வீசப்பட்ட நெகிழியை (Use and throwaway plastic) சேகரித்தல்(Storage) வழங்குதல்(Supply) கொண்டு செல்லுதல் (Transport) tpwg(d செய்தல்(Sale) kw;&k; பகிர்ந்தளித்தல்(Distribution) ) fpatw;(w j(l *ra;' +kw;f,;l '(, tpjpf(s kR&fpdw egUf;- fPo;f,;l th& .guhjk; tpjpf;f Tk; '(, tpjpfs; VwgLj;j Tk; kdwj;jpd; ./kjpf;- (tf;ggLfpw'

| | |
|---|---|
| 1) i# | $ra1hf;f .jpfhhp2 efuhl;rpg; g-jpfsp1; *ra1hf;f .jpfhhp 3dggLgt4 efuhl;rp )(,ahsh; ) th;) |
| ii# | )a;t5 elj;' k; .jpfhhp2 )a;t5 elj;' k; .jpfhhp 3dggLgth;fs efuhl;rpg;g-jpfsp1; 'gg5t5g ,p*kwghh;( tahsh;) 'gg5t5 )a;thsh;) 'gg5t5 .6t1h; kw;&k; )(,ahsuh1; .jpfhukspf;fggl;l gpw g,pahsh;f sh th;] |
| iii# | *k1;8 (waP;L .6t1h2 9e;j cgtpjpfsp1; $jhptpf;fggl;Ls;s $ghUsl f;fk; $jhlhghd fUj;' fsp1; *k1; 8 (waP;L .6t14 )(,ahs*u ) thh;] |
| iv# | j,;l(dfs; tpjpf;-k; 8(wfs2 9e;j cg tpjpfsp1 $jupt pf;fggl;Ls;s tpjpf(s kR&gtu;f :f;- 8j1;8(w 9u,;lhk; 8(w kw;&k; 8dwhk; 8(wahd -wwj;jpw;- .l;lt(, 21; f,;Ls;s th& epu;,ak; $raaggl;Ls;s .guhjj;(j -wwk; e(l$g&fpdw 9lj;jp*1*a Spot fine# t+1pf;fggLt'ld; j(l $raaggl;l $efp;;pfs; gwp8j1 $raaggLk;) ehd;fht' 8(wahf kR&gtUf;- cldoahf $jh;p1;< cupkk; 9uj;' $raaggLk;] |

3) th;j;j f ep&tdfspd;t(fgghL 2

I. $khj;j khf Whole sale#
*rkj;j 1; to = ;- j 1;* fh , ;L *r 1;6 j 1; twg ( d
*ra;j 1;g f ; e;j s j ;j 1;

II. வணிக வளாககள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

III. ks ( f f ( l f s; kUe;' f ( l f s; gof ;f ( l f s;
fha;fw f ( l f s; 9 ( wr;r kw;&k; kPd;f ( l f s;
8 j 1hd ( t f s;

IV7 rwa t , f twg ( dahsu;f s; தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

3. இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்:-

இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் ∴ எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.

துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துபவ4

4. அட்டவணை ஐஐ-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ அவருக்கு எதிராக கடையை ∴ நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் ∴ இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் ∴ மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ∴ பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

5. மேல் முறையீட்டுக்கு உரிமை:-

**மேட்டூர் நகராட்சியின்** இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் **மேட்டூர் நகராட்சி** நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

6.தண்டனைகள் விபரம்:-

அட்டவணை **II**

பிரிவு 306 (28-யு)-ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| i. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல் வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல். | 25000 | 50000 | 100000 |

| | | | | |
|---|---|---|---|---|
| ii | வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல | 10000 | 15000 | 20000 |
| iii. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 |
| iv | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நாளிதழில் விளம்பரம் செய்து பொது மக்களிடமிருந்து வரப்பெறும் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளின் மீது இறுதி முடிவு எடுக்க ஆணையாளருக்கு முழு அதிகாரம் வழங்கலாம்
3. மாவட்ட அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
4. விளம்பர செலவுத்தொகை மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கிடலாம்

(ந.க.எண்.1665.்.2017.்.எச்1)

<u>தீர்மானஎண். 61 நாள் 08.03.2019</u>

<u>அனுமதிக்கப்பட்டது</u>

**5)** இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள சைக்கிள் ஸ்டேண்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு **05.03.2019**ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு ஒன்றுக்கு)** |
|---|---|---|
| 1. | திரு.கே.சூர்யா க/பெ.குல்லகவுண்டர்,<br>ராமன் நகர் ( அஞ்சல் ),<br>மேட்டூர் அணை. | ரூ.6,55,500/- |
| 2. | திரு.எம்.ரகுநாதன் த/பெ.முத்துசாமி,<br>2ஏ229, காளியம்மன் கோவில் பின்புறம்,<br>மேட்டூர் அணை. | ரூ.6,49,800/- |

அலுவலகக் குறிப்பு

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள திரு.கே.சூர்யா, மேட்டூர்அணை என்பவர் அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.6,55,500/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளி தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.15,274/– கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.1,17,475/– கூடுதலாகவும் உள்ளது.

எனவே இந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

நக.எண்.5811/2018/அ3

தீர்மானஎண். 62 நாள் 08.03.2019

அனுமதிக்கப்பட்டது

**6)** இந்நகராட்சிக்கு சொந்தமான மேட்டூர் கழிவுநீர்ப் பண்ணையில் உள்ள **25** இலவம்பஞ்சு மரங்களின் இலவம்பஞ்சினை மட்டும் அனுபவிக்கும் உரிமத்திற்கு **05.03.2019**ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | திரு.மணி<br>த/பெ.ஆறுமுகம்,<br>2/85, கோவில்பாளையம் (அஞ்சல்),<br>மேட்டூர். | ரூ.4,500/- |
| 2. | திரு.செல்வன்<br>த/பெ.ஆறுமுகம்,<br>நவப்பட்டி (அஞ்சல்),<br>போன்கரடு, மேட்டூர். | ரூ.2,500/- |

அலுவலகக் குறிப்பு

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள திரு.மணி, மேட்டூர்அணை என்பவர் அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.4,500/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளி தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.3,350/– குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.2,982/– குறைவாகவும் உள்ளது. இருப்பினும் இவ்வினத்திற்கு இதுவரை சுமார் **12** முறை மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும் தற்போதைய நிலவரப்படி மரங்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

எனவே இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

நக.எண்.3928/2017/அ3

தீர்மானஎண். 63 நாள் 08.03.2019

மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது.

**7) 2019 ல் நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு வாக்கு சாவடிகளில் அடிப்படை வசதிகள் செய்வும், வாக்காளர் பட்டியல் வாக்குச் சாவடி பட்டியல் தயார் செய்யவும், வாக்குச்சாவடிகளுக்கு வரும் வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் வாக்கு எண்ணும் பணிக்கு வரும் அலுவலர்களுக்கு அரசு அறிவிக்கும் ஊதியம் வாக்கு எண்ணும் மையத்திற்கு பாதுகாப்பு செய்யவும் இன்னும் தேர்தலின் போது பணிபுரியும் பணியாளர்களுக்கும் தேர்தல் தொடர்பான பல்வேறு செலவினங்கள் செய்ய வேண்டி உள்ளதால் தேர்தல் அவசரத்தை கருத்தில் கொண்டு செய்யும் செலவினத்திற்கும் உத்தேசமாக ரூ.200000/- ரூபாய் இருபது லட்சம் மட்டும் செலவு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.**

. 6 t 1 f -wjg;>

1. **ரூ.20,200,000/- ரூபாய் இருபது இலட்சம் அனுமதிக்கலாம்**
2. **தேர்தல் அவசர அவசியத்தை கருதி 2019ல்ல நடைபெற இருக்கும் உள்ளாட்சி தேர்தலுக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.709/சி1/2019)**

தீர்மானஎண். 64 நாள் 08.03.2019
அனுமதிக்கப்பட்டது

8) மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிடம் கட்ட அனுமதி கோரி வரும் கட்டிட விண்ணப்பங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சி கட்டிட விதிகளின்படி பரிசீலினை செய்யப்பட்டு, ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட உரிமையாணை கட்டண விகிதங்களின்படி கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு, அனுமதி காலம் மூன்றாண்டுகளுக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, தமிழக அரசால் அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்ஏ1), நாள்.04.02.2019—ன்படி இறுதி செய்யப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழ் எண்.43, பகுதி III பிரிவு1(a) நாள்.04.02.2019ல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள "தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019" ன்படி உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்படும் நடைமுறைகளை கடைபிடிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 05.03.2019ந் தேதி சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.31159/2019/டிபி3ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ம் மற்றும் அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்ஏ1) நாள்.04.05.2019ம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்காகவும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.5064/2018/எப்1)**

**<u>தீர்மானஎண். 65 நாள் 08.03.2019</u>**

**பதிவு செய்யப்பட்டது**

**9)** தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, விதி 23ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.50977/2018/டிபி3 நாள்.07.03.2019ல், நகராட்சியில் (Screening Committee) பரிசோதனைக்குழு கீழ்க்காணும் உறுப்பினர்களை கொண்ட குழு அமைக்க உத்திரவிடப்பட்டுள்ளது. மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்குள் கட்டிட விண்ணப்பங்கள் தயார் செய்யும் பணிக்கு தொழில் சார்ந்த வல்லுநர்கள் நியமனம் செய்யும் நடைமுறைகளில் பரிசோதனைக்குழுவில்

| வ எண் | உறுப்பினர்கள் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நகராட்சி ஆணையர் | 1 |
| 2 | நகரமைப்பு அலுவலர் / பொறியாளர் | 1 |
| 3 | நகரமைப்பு ஆய்வாளர் | 1 |

மேற்கண்டவாறு உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று அமைத்திட உத்திரவிடப்பட்டதின் அடிப்படையில் மேற்காண் 3 உறுப்பினர்கள் கொண்ட பரிசோதனைக் குழு அமைத்திடவும் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 முதல் 7 வரையிலான நிபந்தனைகளுக்குட்பட்டு பரிசோதனைக்குழு மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.5064/2018/எப்1)**

**<u>தீர்மானஎண். 66 நாள் 08.03.2019</u>**

**பதிவு செய்யப்பட்டது**

**10)** மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிடம் கட்ட அனுமதி கோரி வரும் கட்டிட விண்ணப்பங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சி கட்டிட விதிகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட உரிமையாணை கட்டண விகிதங்களின்படி கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு, அனுமதிகாலம் மூன்றாண்டுகளுக்கு மட்டும் வழங்கப்பட்டும் வருகிறது. தற்போது, தமிழக அரசால் அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்ஏ1), நாள்.04.02.2019–ன்படி இறுதி செய்யப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழ் எண்.43, பகுதி III, பிரிவு 1(a)

நாள்.04.02.2019ல் 'பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்படி' உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்படும் நடைமுறைகளை கடைபிடிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 05.03.2019ந் தேதிய சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.31159/2019/டிபி3–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இனிவரும் காலங்களில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019, பிரிவு 14ன்படி திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை கால நீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் அனுமதிகாலத்தினை 5 ஆண்டுகளுக்கு வழங்கவும், ஒருமுறை கால நீட்டிப்பு காலத்தினை 3 ஆண்டுகளுக்கு வழங்கவும், புதிய கால அவகாசத்திற்கேற்ப உரிமையாணை கட்டணங்களின் விகிதத்தினை கீழ்க்கண்டவாறு திருத்திய கட்டண விகிதங்களின்படி வரும் 01.04.2019 முதல் வசூலிக்கவும், மேற்படி திருத்தியமைக்கப்பட்ட உரிமையாணை கட்டண விபரத்தினை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஏற்படும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| நிர்ணயம் செய்யப்படும் கட்டண விபரம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ எண் | சட்டப்பிரிவு / விதிகள் | உரிமம் வழங்கப்படும் இனங்கள் | கட்டண விகிதம் (ரூபாயில்) | | எவ்வளவு பரப்பு/ எண்ணிக்கை | உரிம காலம் | குறிப்பு |
| | | | தற்போது நடைமுறையில் உள்ள கட்டணம் | 01.04.2019ல் நிர்ணயம் செய்ய உத்தேசத்துள்ள கட்டணம் | | | |
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** | **(5)** | **(6)** | **(7)** | **(8)** |
| 1 | | விண்ணப்ப பதிவுக் கட்டணம் (Online Registation fee) | 500 | 500 | - | ஒரு கட்டிட அனுமதி விண்ணப் பத்திற்கு ஒரு முறை | Online ல் பதிவு செய்யும் போது செலுத்த வேண்டும் |
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** | **(5)** | **(6)** | **(7)** | **(8)** |
| 2 -I | விதி 7(2) (1) (a) தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள், 2019 | <u>கூர்ந்தாய்வு கட்டணம் (Scrutiny fee)</u> | 200 | - | - | - | - |
| (a) | | திட்ட அனுமதி கோரி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் - மொத்த கட்டிடத்தின் பரப்பளவிற்கு | - | 2.00 | ஒரு சதுர மீட்டருக்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | குறைந்த பட்சம் கட்டணம் ரூ.200/- செலுத்த வேண்டும் அரசால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தொகை செலுத்தப்பட வேண்டும் |
| (b) | | முதல் திருத்திய வரைபடத்திற்கு திட்ட அனுமதி கோரி விண்ணப்பிக்கும் போது மொத்த கட்டிடத்தின் பரப்பளவிற்கு | - | 1.00 | ஒரு சதுர மீட்டருக்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | குறைந்த பட்சம் கட்டணம் ரூ.200/- செலுத்த வேண்டும் அரசால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தொகை செலுத்தப்பட வேண்டும் |
| (c) | | இரண்டாவது திருத்திய வரைபடத்திற்கு திட்ட அனுமதி கோரி விண்ணப்பிக்கும் போது - மொத்த கட்டிடத்தின் பரப்பளவிற்கு | - | 0.40 | ஒரு சதுர மீட்டருக்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | குறைந்த பட்சம் கட்டணம் ரூ.200/- செலுத்த வேண்டும் அரசால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தொகை செலுத்தப்பட வேண்டும் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (d) | | 3 வது திருத்திய வரைபடத்திற்கு திட்ட அனுமதி கோரி விண்ணப்பிக்கும் போது - மொத்த கட்டிடத்தின் பரப்பளவிற்கு | - | 0.20 | ஒரு சதுர மீட்டருக்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | குறைந்த பட்சம் கட்டணம் ரூ.200/- செலுத்த வேண்டும் அரசால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தொகை செலுத்தப்பட வேண்டும் |
| (e) | | தொடர்ச்சியான திருத்திய வரைபடத்திற்கு | - | இல்லை | - | - | குறைந்த பட்சம் கட்டணம் ரூ.200/- செலுத்த வேண்டும் அரசால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தொகை செலுத்தப்பட வேண்டும் |
| II | விதி 7(2) (ii) | மனைப்பிரிவுகள்/ மனை உட்பிரிவுகள், மனை ஒருங்கினைத்தல் | | 1.50 | ஒரு சதுர மீட்டர் நிலம் மற்றும் அதன் பாகத்திற்கு | ஒரு முறை | அரசால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தொகை செலுத்தப்பட வேண்டும் |
| III | விதி 7(2) (iii) | நில உபயோக மாற்றம் (Re- Classification ) | - | 20,000 | ஒருமுறை | ஒரு விண்ணப்பத்திற்கு | நில உபயோக மாற்றம் செய்யும் இனங்களை தினசரி நாளிதழ்கள் மற்றும் அரசிதழ்களில் அறிவிக்கை செய்யும் உண்மையான செலவினம் இதைவிடக் கூடுதலானால் கூடுதல் செலவினம் மனுதாரரால் செலுத்தப்பட வேண்டும் |
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** | **(5)** | **(6)** | **(7)** | **(8)** |
| 3<br>(a) | பிரிவு 197, 208& 215 -1920 ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் | <u>கட்டிட உரிமையாணைக்கட்டணம்</u> கட்டிட உரிமக் கட்டணம் | 500 | 850 | ஒருமுறை | ஐந்து ஆண்டு காலத்திற்கு | - |
| (b) | | தரைப்பட அங்கீகார கட்டணம்<br>அ) மனையின் பரப்பளவு 100 ச.மீ வரை | 200 | 350 | ஒருமுறை | ஐந்து ஆண்டு காலத்திற்கு | - |
| | | ஆ) 101 ச.மீ முதல் 200 ச.மீ வரை | 300 | 500 | ஒருமுறை | ஐந்து ஆண்டு காலத்திற்கு | - |
| | | இ) 201 ச.மீ. முதல் 300 ச.மீ வரை | 400 | 700 | ஒருமுறை | ஐந்து ஆண்டு காலத்திற்கு | - |
| | | ஈ) 301 ச.மீ முதல் 500 ச.மீ வரை | 500 | 900 | ஒருமுறை | ஐந்து ஆண்டு காலத்திற்கு | - |
| | | உ) 500 ச.மீ.மேல் | - | கூடுதலாக ஒவ்வொரு 100 ச.மீக்கும் ரூ.200/- | | ஐந்து ஆண்டு காலத்திற்கு | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (C) | | குடிசை தவிர்த்த யாதொரு கட்டிடத்தை கட்டுவதற்கு அல்லது இடித்துவிட்டு திரும்ப கட்டுவதற்கு அல்லது கட்டிடத்தில் மாறுதல்கள் செய்வதற்கு அல்லது கூடுதலாக கட்டுவதற்கு - கட்டிட பரப்பிற்கு | | | | | |
| | | (i)குடியிருப்பு உபயோகம் தரை தளம் | 200 | 350 | 10ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | - ஆர்.சி.சி/ ஒட்டு கூரை/ ஏ.சி.ஷீட் கூரை எதுவாயினும் |
| | | முதல் தளம் | 250 | 450 | 10ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | ஆர்.சி.சி/ ஒட்டு கூரை/ ஏ.சி.ஷீட் கூரை எதுவாயினும் |
| | | இரண்டாம் தளம் மற்றும் அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு தளத்திற்கும் | 300 | 500 | 10ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | ஆர்.சி.சி/ ஒட்டு கூரை/ ஏ.சி.ஷீட் கூரை எதுவாயினும் |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| | பிரிவு 197, 208& 215 1920 ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் | (ii)வணிக உபயோகம் (Commercial Use) தரைதளம் | 400 | 700 | 10ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | ஆர்.சி.சி/ ஒட்டு கூரை/ ஏ.சி.ஷீட் கூரை எதுவாயினும் |
| | | முதல் தளம் | 500 | 850 | 10ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | ஆர்.சி.சி/ ஒட்டு கூரை/ ஏ.சி.ஷீட் கூரை எதுவாயினும் |
| | | இரண்டாம் தளம் மற்றும் அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு தளத்திற்கும் | 600 | 1000 | 10ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | ஆர்.சி.சி/ ஒட்டு கூரை/ ஏ.சி.ஷீட் கூரை எதுவாயினும் |
| | | (iii) தொழிற்சாலை உபயோகம் (Industrial Use) தரைதளம் | - | 900 | 10ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | எந்த வகை கூரையிலான கட்டிடமாக இருந்தாலும் |
| | | முதல் தளம் | - | 1000 | 10ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | எந்த வகை கூரையிலான கட்டிடமாக இருந்தாலும் |
| | | இரண்டாம் தளம் மற்றும் அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு தளத்திற்கும் | - | 1200 | 10ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | எந்த வகை கூரையிலான கட்டிடமாக இருந்தாலும் |
| | | (IV) கல்வி உபயோகம் மற்றும் நிறுவனங்கள் (Educational use and Institution) தரைதளம் | - | 700 | 10ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | எந்த வகை கூரையிலான கட்டிடமாக இருந்தாலும் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முதல் தளம் | - | 850 | 10ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | எந்த வகை கூரையிலான கட்டிடமாக இருந்தாலும் |
| | | இரண்டாம் தளம் மற்றும் அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு தளத்திற்கும் | - | 1000 | 10ச.மீ மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | எந்த வகை கூரையிலான கட்டிடமாக இருந்தாலும் |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| (d) | பிரிவு 1971 208 & 215 1920ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் | (அ) தூய மல அறைத் தொட்டி ( Septic tank) | 200 | 350 | ஒன்றிற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | கட்டிடத்திற்கு உள்ள வெளியே எதுவாகினும் |
| | | (ஆ) கழிவு நீர்த் தொட்டி (Soakpit) | 200 | 350 | ஒன்றிற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | கட்டிடத்திற்கு உள்ள வெளியே எதுவாகினும் |
| | | (இ) மல அறை | 200 | 350 | ஒன்றிற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | கட்டிடத்திற்கு உள்ள வெளியே எதுவாகினும் |
| | | (ஈ) குளியல் அறை | 200 | 350 | ஒன்றிற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | கட்டிடத்திற்கு உள்ள வெளியே எதுவாகினும் |
| | | (உ) குடிநீர்த் தொட்டி | 200 | 350 | ஒன்றிற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | கட்டிடத்திற்கு உள்ள வெளியே எதுவாகினும் |
| | | (ஊ) சுற்றுச்சுவர் (2.0 மீ உயரத்திற்கு மிகாமல்) | 150 | 250 | 10 மீட்டர் நீளம் மற்றும் அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | கட்டிடத்திற்கு உள்ள வெளியே எதுவாகினும் |
| (e) | | உண்மை நகல் | 100 | 250 | ஒரு வரைபடத்திற்கு | ஒருமுறை | - |
| (f) | | கட்டிடம்இடிக்கப்பட்ட சாமான்கள் சேமித்து வைக்க (Material Storage Charge) | 200 | 3500 | ஒருகட்டிட விண்ணப்பத்தற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | சாலையோரம் போக்குவரத்து பொது மக்களுக்கு இடுயூறு இல்லாமல் 1 வார காலத்திற்கு மிகாமல் சேமித்து வைக்க |
| (g) | | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பிற்கான பாதுகாப்பி வைப்பு தொகை ( Security Deposit) | 2000 | 3500 | ஒருகட்டிட விண்ணப்பத்தற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | - |
| (h) | | கட்டிடம் இடிப்பதற்கான கட்டணம் (Demolition charges) | 1500 | 2500 | ஒருகட்டிட விண்ணப்பத்தற்கு | ஐந்து ஆண்டு காலத்திற்கு | - |
| | தண்டக்கட்டணம் கட்டுமானப்பணிகள் நகராட்சி நிர்வாக அதிகாரின் முன் அமனுமதி பெறாமல் துவங்கப்பட்டிருந்தால் மொத்த உரிமக்கட்டணத்தில் 50% கூடுதலாக செலுத்த வேண்டும். | | | | | | |
| 4 | விதி 14(2) தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் -2019 | திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கும் தேதியிலிருந்து 5 ஆண்டு காலத்திற்குள் கட்டி முடிக்கப் படவில்லையென்றால் , ஏற்கனவே செலுத்தப்பட்ட அதே தொகையை மீண்டும் செலுத்தி விண்ணப்பிக்கும் பட்சத்தில் மீண்டும் 3 ஆண்டு காலத்திற்கு ஒரே ஒரு முறை மட்டும் திட்ட அனுமதி கட்டிட அனுமதிக்கான கால நீட்டிப்பு உரிய விதிமுறைகளுக்குட்பட்டு வழங்கப்படும். | | | | | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 **Part – விதி 23** | தகுதிவாய்ந்த தொழில் வல்லுநர் பதிவு செய்தல் (Registration of Professionals) | | | | | பதிவுக் காலம் முடிந்த பின் இதே கட்டணத்தை அல்லது அரசால் நகராட்சியால் நிர்ணயம் செய்யப்படும் கட்டணத்தை பதிவு காலம் முடிவடைவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்னதாக மீண்டும் செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். |
| (a) | | பதிவுக் கட்டணம் (Registration Fee) | - | 5000 | ஒருமுறை | ஐந்து ஆண்டு காலத்திற்கு | |
| (b) | | உரிமக் கட்டணம் (Licence Fee) | - | 5000 | ஒருமுறை | ஐந்து ஆண்டு காலத்திற்கு | |

அலுவலக குறிப்பு

அ) திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் 01.04.2019 முதல் திருத்தியமைக்கப்பட்ட புதிய உரிமையாணை கட்டணங்களின்படி கட்டணங்கள் வசூலிக்கும் பொருட்டு திருத்தியமைக்கப்பட்ட புதிய உரிமையாணை கட்டணங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) புதியதாக திருத்தியமைக்கப்பட்ட உரிமையாணை கட்டண விபரங்களை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.5064/2018/எப்1)**

**<u>தீர்மானஎண். 67 நாள் 08.03.2019</u>**

**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி**